திரு. தி. கா. நல்லப்பன் : தலைவர் அவர்களே, நரிக்குறவர்களைப் பொறுத்தவரையிலே அவர்களுக்கு வீடு கட்டிக் கொடுத்தாலும் அவர்கள் இருக்கக்கூடிய ஜாதியைப் பொறுத்தவரையிலே மிகவும் பின்தங்கியவர்களாக இருக்கிறார்கள். ஆக்வே அவர்களை ஷெட்யூல்ட் ட்ரைபிலே சேர்ப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, இந்தக் கேள்விக்கும் மூலக் கேள்விக்கும் தொடர்பு இல்லை.

நில உச்சவரம்புச் சட்டத்தின்கீழ் சேலம் மாவட்டத்தில் எடுக்கப்பட்ட உபரி நிலம்.

391—(*வினா எண் 21490) திரு. இ. கணேசன் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் நில உச்சவரம்புச் சட்டத்தின் மூலம் அரசு எடுத்த உபரி நிலம் எத்தனை ஏக்கர் ?

(ஆ) அவைகளில் ஆதிதிராவிடர் மற்றும் பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்தவர்களுக்குக் கொடுக்கப்பட்ட நிலம் எத்தனை ஏக்கர் ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ) சேலம் மாவட்டத்தில் நில உச்சவரம்புச் சட்டத்தின்கீழ் எடுக்கப்பட்ட நிலம் 614 ஏக்கர்.

(ஆ) மேற்படி உபரி நிலத்தில் ஆதிதிராவிடர்கள் 16 பேர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றது.

திரு. இ. கணேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த அடிப்படையில் நிலங்கள் பிரித்துக் கொடுக்கப்படுகின்றன? மீதியுள்ள நிலங்களை இன்னும் பிரித்துக் கொடுக்காமல் இருப்பதற்கு என்ன காரணம் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, நில உச்ச வரம்புச் சட்டத்தின் மூலமாக நிலங்களை எடுக்கின்றபோது அந்த நிலங்களை இதற்கு முன்னால் குத்தகைதாரர்கள் பயன்படுத்திக் கொண்டிருந்தால் அந்தக் குத்தகைதாரர்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படுகின்றது. அதற்குப் பிறகு ஆதி திராவிட மக்கள், அதிலே நேரடியாக விவசாயம் செய்கின்ற ஆதி திராவிட மக்கள் ஆகியோருக்கு முன்னுரிமை கொடுக்கப்படுகின்றது. அதற்குப் பிறகு முப்படையைச் சேர்ந்த பணியாளர்கள், முப்படைகளில் வேலை செய்கின்றபோது இறந்தவர்கள், அதற்குப் பிறகு ஓய்வு பெற்றவர்களின் குடும்பத்தினர் ஆகியோருக்குக் கொடுக்கப்படுகின்றது.

1984 மார்ச் 29]

அடுத்தபடியாக, பர்மா, இலங்கை ஆகிய இடங்களிலிருந்து வருகின்ற மக்கள், 10 ஆயிரம் ரூபாய்க்குக் குறைவாகப் பணம் கொண்டு வந்தால், அவர்களுக்குக் கொடுக்கப்படுகின்றது. இந்த விகிதத்தில் கொடுக்கப்படுகிறது. எடுக்கப்பட்ட நிலம் இன்னும் சில கொடுக்கப்படாமல் இருப்பதற்கான காரணம் உச்ச நீதி மன்றத்திற்குச் சென்று தடை உத்தரவு வாங்கி இருப்பதுதான்.

திரு. இ. கணேசன் : தலைவர் அவர்களே, இந்தமாதிரி வினியோகிக்கப்பட்ட நிலங்களை அவர்கள் விற்றுவிடும்போது அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, நில உச்சவரம்புச் சட்டத்தின் மூலமாக எடுக்கப்பட்ட நிலத்தை யாரும் விற்க முடியாது. அப்படி விற்றால், அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும். யாருக்குக் கொடுக்கப்படு கிறதோ அவர்களும் 10 ஆண்டு காலத்திற்குள்ளாக அதை விற்கக் கூடாது என்று விதிமுறை சொல்கிறது.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்தில் உபரி நிலமாக சுமார் 600 ஏக்கர் எடுக்கப்பட்ட தாகவும் சுமார் 16 பேருக்கு வினியோகம் செய்யப்பட்டதாகவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஒரு நபருக்கு எத்தனை ஏக்கர் வழங்கப்பட்டது? சேலம் மாவட்டத்தில் இன்னும் உபரியாக இருக்கக்கூடிய நிலம் எவ்வளவு? எவ்வளவு காலத்திற்குள் அவை ஆர்ஜிதம் செய்யப்பட்டு வினியோகிக்கப் படும்?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொருவருக்கும் 3 ஏக்கர் புஞ்செய் நிலம் அல்லது $1\frac{1}{2}$ ஏக்கர் நஞ்செய் நிலம் இப்போது கொடுக்கப்படுகிறது. சேலம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், சில நிலங்கள் சம்பந்தப்பட்டவரை உச்ச நீதிமன்றத்திற்குச் சென்றிருக்கிறார்கள். ஆகையால் அதன்மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### திருப்புவனம் புதூரிலுள்ள பிரமனூர் ஊரணியை ஆக்கிரமிப்பு செய்துள்ள தனி நபர்கள்.

392—(*வினா எண். 22478) திரு. க. பாரமலை : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், மானாமதுரை தொகுதி திருப்புவனம் புதூரில் மாரியம்மன் கோவிலுக்குப் பின்புறம் பிரமனூர் செல்லும் கால்வாயை ஒட்டி உள்ள ஊரணியைத் தனி நபர்கள் ஆக்கிரமித்து விவசாயம் செய்துவருவது அரசுக்குத் தெரியுமா?